**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C No. 108 / 2024 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 3 |

| | | |
|---|---|---|
| Name | : | விஜயகுமார் |
| Father's Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | தம்பிரான்பட்டி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | ஓட்டுநர் |
| Religion | : | இந்து |
| Age | : | 28 |
| ACCUSED | | ரெங்கநாதன் – ஆஜர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2025.

**முதல் விசாரணை:-**

நான் பெரம்பலூர் மாவட்டம், தம்பிரான்பட்டி கிராமத்தில் குடியிருந்து ஓட்டுநராக தொழில் செய்து வருகின்றேன். புகார்தாரர் செந்தில்குமாரை எனக்கு தெரியும், அவர் தற்போது சிங்கப்பூரில் உள்ளார். வழக்கு விபத்தில் இறந்து போன ராஜேந்திரனை எனக்கு தெரியும். செந்தில்குமார், ராஜேந்திரன் ஆகியோருக்கு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு விபத்து ஏற்பட்டது. செந்தில்குமாரும், ராஜேந்திரனும் இருசக்கர வாகனத்தில் தம்பிரான்பட்டிக்கு செல்வதற்காக ரோட்டைக்கடக்கும் போது செஞ்சேரி நான்கு ரோட்டில் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்தவுடன் நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். நான் சென்று பார்த்த போது ராஜேந்திரனுக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. கை மற்றும் காலில் காயம் ஏற்பட்டிருந்தது. செந்தில்குமாருக்கு காலில் காயம் ஏற்பட்டிருந்தது, காயம்பட்ட இருவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு

கொண்டு சென்றனர். விபத்து ஏற்பட்டு சுமார் 10 நாட்கள் கழித்து ராஜேந்திரன் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார். நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது விபத்து ஏற்படுத்திய கார் சம்பவ இடத்தில் இருந்தது. காரை ஓட்டி வந்த ஓட்டுநர் சம்பவ இடத்தில் இருந்தார், அவரை நான் பார்த்தேன். அவர் ஆஜர் எதிரி தான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)</u>**

விபத்தில் இறந்து போன ராஜேந்திரன் எனது சித்தப்பா என்றால் இல்லை, தெரிந்த நபர் ஆவார். விபத்து குறித்து மணி என்பவர் எனக்கு தகவல் சொன்னார். அவர் தம்பிரான்பட்டியை சேர்ந்தவர் ஆவார். விபத்து ஏற்பட்ட பிறகு செந்தில்குமார், ராஜேந்திரன் ஆகியோர் ரோட்டின் மையப்பகுதியில் தான் கிடந்தார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்தினார் என்று சம்பவ இடத்தில் இருந்த நபர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தகவல் கிடைத்து நான் அரை மணி நேரத்தில் நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் சம்பவம் நடந்த அடுத்த நாள் என்னை விசாரித்தார்கள், அதற்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>மறு விசாரணை:–</u>**

மணி என்ற நபர் தம்பிரான்பட்டியை சேர்ந்தவர், அவர் தற்போது ஊரில் இல்லை, வெளிநாடு சென்று விட்டார்.

**<u>மறு குறுக்கு விசாரணை :–</u>**

மணி என்பவர் என்னிடம் விபத்தை தான் நேரில் பார்த்ததாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. விபத்து ஏற்பட்டதாக மட்டும் எனக்கு தகவல் சொன்னார்.

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**